கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

ான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2015/2016
(ஒக்டோபர் 2018)

## DTS 4223 Introduction to Theoretical Literatures on Drama & Theatre

நரம் : 03 மணித்தியாலங்கள்

குதி – I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து இரு வினாக்களுக்கும் என மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) மதங்க சூளாமணியில் சேக்ஸ்பியர் நாடகங்களுக்கு சுவாமி விபுலானந்தர் சூட்டிய தமிழ் பெயர்களைக் குறிப்பிடுக.
 1. Love's Labour Lost
 2. King Lear
 3. Romeo and Julid
 4. The Tempest
 5. "The winter's Tale"

(05 புள்ளிகள்)

(ஆ) மதங்க சூளாமணியில் பிரிக்கப்பட்டுள்ள உறுப்புக்கள் எத்தனை அதனைக் குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

(இ) நீர் இனங்கண்ட இயல்களின் ஒன்றைக் குறிப்பிட்டு, அவ்வியல் விளக்கும் செய்திகளை மிகச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

02. (அ) மதங்க சூளாமணியில் சுவாமி விபுலானந்தர் தனது எடுத்துக்காட்டியலினை விளக்கக் கையாண்ட சேக்ஸ்பியரது (செகசிற்பியர்) பன்னிரெண்டு நாடகங்களையும் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாடகப் பாத்திரம் அதனோடு இணைந்த சம்பவங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை மதங்க சூளாமணி குறிப்பிடுவனவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

03. (அ) நாட்டிய சாஸ்திரத்தின் 36 அத்தியாயங்களையும் "பரதமுனிவரின்" வரிசைக்கிரம அடிப்படையில் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் அபிநயமான ஆங்கீக அபிநயத்தை நாடக நிகழ்த்துகை ஒன்றிற்கு நீர் எவ்வாறு பிரயோகிப்பீர் என்பதனை உமது நாடக அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி – II

04. (அ) நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் நாடக மேடைக் கட்டுமானங்களை குறிப்பிடுக. (05 புள்ளிகள்

(ஆ) இதில் ஏதாவது இரு கட்டுமானப் பணிகள் தொடர்பாக உமது மன பதிவினை விளக்குக? விளக்கப்படங்கள் மிக அவசியம் (10 புள்ளிகள்

(இ) அரங்கில் அரங்கேற்றம் செய்வதற்கு நாட்டிய சாஸ்திர ஆசிரிய குறிப்பிடும் "பூர் வரங்கம்" அதன் வேலைகள் தொடர்பாக கருத்து செய்க? (10 புள்ளிகள்

05. (அ) சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் 11 ஆடல்களை விழுந்தாடியவைகள், நின்றாடியவைகளாகப் பிரித்துக் காட்டுக? (05 புள்ளிகள்

(ஆ) சிலப்பதிகார அரங்கேற்றக் காதையில் ஒரு நாடக நிகழ்த்து தொடர்பாக குறிப்பிடப்படும் செய்திகளை எடுத்துக்காட்டுகள் அடிப்படையாகக் கொண்டு விளக்குக? (20 புள்ளிக

06. (அ) அரிஸ்ரோட்டிலின் கவிதையியலின் கதைப்பின்னல் வகைகள் யா விளக்குக? (15 புள்ளி

(ஆ) அரிஸ்ரோட்டிலின் கவிதையியலில் வெளிப்படும் அவல நாடகத் பகுதிகள் யாது? விளக்குக. (10 புள்ளி

*****